IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC . No.410/2022 Dep.of - PW.1

Name : பழனிசாமி Caste :

Fathers Name : Calling :

Village : Religion:

Taluk : Age :

(எதிரிகள் ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------22

Chief Examination : Date : 03.05.2023

1) நான் தற்பொழுது நாமக்கல், செங்கோடம்பாளையத்தில் குடியிருந்துகொண்டு கோழிப்பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 02.04.2022ம் தேதியன்று மாலை சுமார் 06.00 மணிக்கு நான் எனது வீட்டிலிருந்து நானும், எனது மகன் சதீஷ்குமார் என்பவரும் எனக்கு மூட்டு அறுவை சிகிச்சை செய்திருந்ததால் மருத்துவ பரிசோதனை செய்வதற்காக நாமக்கல் செல்வதற்கு எர்ணாபுரம் பஞ்சாயத்து ரோடு வழியாக செல்வதற்காக எனது ஊர் பஞ்சாயத்து எல்லையை தாண்டி எர்ணாபுரம் பஞ்சாயத்திற்குட்பட்ட ரோட்டிற்கு வந்தோம். அப்பொழுது எதிரிகள் ரோட்டில் நின்றுகொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் வழிவிடுங்கள் நாமக்கல் செல்ல வேண்டும் என்று கூறினேன். எதிரிகள் ரோட்டில் இருந்து விலகி நிற்கவில்லை. சாமி வருகிறது உனக்கு என்ன அவசரம் ஓரமாக நில் என்று எதிரிகள் என்னிடம் கூறினார்கள். நான் எதிரிகளிடம் சாமி வருவதற்கு இன்னும் நேரமாகும் என்றும், அதற்குள் நாங்கள் சென்றுவிடுகிறோம் என்றும் கூறினேன். அப்பொழுது 2ம் எதிரி சதீஷ்குமார் எனது சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்ததில் முழங்காலில் அடிபட்டு வீங்கி விட்டது. நான் கீழே விழுந்ததை பார்த்தவுடன் எனது மகன் ஓடி வந்தார்.

2) அப்பொழுது 1 மற்றும் 3ம் எதிரிகள் எனது மகனை பிடித்துக்கொண்டார்கள். 1ம் எதிரி கல்லை எடுத்து எனது மகனின் தலையில்

அடித்துவிட்டார். பின்னர் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். பின்னர் சிகிச்சைபெற்றுக்கொண்டு வேலகவுண்டம்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் கொடுத்தது தான். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

1) 1ம் எதிரியின் மனைவி சாந்தி என்பவர் கோழிப்பண்ணையில் கூலி வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதிக்கு ஒரு வருடத்திற்கு முன்னரே 1ம் எதிரியின் மனைவி எனது கோழிப்பண்ணைக்கு வேலைக்கு வருவதை நிறுத்திவிட்டார் என்றால் சரிதான். அதன் பின்னரும் நான் 1ம் எதிரியின் மனைவியை கோழிப்பண்ணைக்கு வேலைக்கு கூப்பிட்டும் 1ம் எதிரியின் மனைவி வேலைக்கு வரவில்லை என்றால் நான் வேலைக்கு கூப்பிடவில்லை. நான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேரவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கும், வேலகவுண்டம்பட்டி காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் நான்கு கிலோமீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் இருந்து மூன்று நாட்கள் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் இரண்டு நாட்கள் கழித்து புகார் கொடுத்துள்ளேன். புகாரை காவல் நிலையத்தில் எழுதிக்கொண்டார்கள் என்றாலும், நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றாலும் சரியல்ல. புகாரை எனக்கு தெரிந்த நபர் எழுதினார். நான் கையொப்பம் செய்தேன். நான் காவல் நிலையத்தில் எத்தனை கையொப்பங்கள் செய்தேன் என்றால் ஞாபகமில்லை.

2) நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்று வாகனத்தின் பதிவு எண்ணை புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு செல்வதற்கு இரண்டு வழித் தடங்கள் உள்ளன என்றால் சரிதான். நானும்,

எனது மகனும் எதிரிகளையும், 1ம் எதிரியின் மனைவியையும் ஜாதி பெயரை சொல்லி திட்டி 1ம்எதிரியின் வீட்டை சேதப்படுத்தியதாக 1ம் எதிரியின் மனைவி கொடுத்த புகாரின்பேரில் என்மீதும், எனது மகன்மீதும் வேலகவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.46/2022 என்ற வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) 1ம் எதிரியின் மனைவி என்மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக நான் எதிரிகள்மீது பொய்யான ஒரு புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை